மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: What is your issue? *(குறுக்கீடு) உட்காருங்கள் டாக்டர் கிருஷ்ணசாமி. சுருக்கமாகச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே 13,000-த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் பல நாட்களாகக் காலவரையற்ற வேலைநிறுத்தத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குடும்பங்கள் பட்டினியிலே இருந்து கொண்டிருக்கின்றன. மத்திய அரசு காலங்கடத்தி அங்கு சுமுகத் தீர்வை ஏற்படுத்தாமல் வளர்த்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நெய்வேலி நிருவாகம் வெளியாட்களைத் தொழிற்சாலைக்குள்ளே கொண்டு சென்று அந்தப் பணியை நடத்திக் கொண்டிருக்கிறது. இதிலே தமிழக அரசு வெறும் பார்வையாளராக மட்டும் இருக்க முடியாது. அங்கு சட்டம்-ஒழுங்கு, பதற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு அமைச்சருடைய கவனத்தை ஈர்த்து, இதிலே தலையிட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நெய்வேலி பிரச்சினையா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, டெங்கு காய்ச்சல்தானே? தயவுசெய்து உட்காருங்கள். அதை இன்று எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

2012 மே 8]

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி என்.எல்.சி. தொழிலாளர்கள் கடந்த 15 நாட்களாக ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, AITUC சங்கத் தொழிலாளர்கள் 15,000 பேர் வேலைநிறுத்தப் போராட்டத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கம் கண்டுகொள்வதே இல்லை. மாநிலத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கடையம், வடகரை, தென்காசி, சங்கரன்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் மரணமும் அடைந்து இருக்கிறார்கள். இந்த டெங்கு காய்ச்சலைப் பரப்பக்கூடிய கொசுக்களைக் கண்டறிவதற்கும், பரிசோதனை கிட்டுகள் உட்பட— இது இரத்த செல்களைக் கடுமையாகப் பாதித்து, உடனடி மரணத்தைக் கொண்டு வரும் என்பதால், உடனடியாக இரத்தம் உட்பட—தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இந்தக் காய்ச்சலை உடனடியாகத் தடுப்பதற்குமான ஏற்பாடுகளை நம்முடைய சுகாதாரத் துறை எந்த அளவிலே செய்து கொண்டிருக்கிறது? உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்ய வேண்டுமென்ற முறையிலே கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கெனவே பன்றிக் காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 11 பேருக்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள். இந்த நிலையில் மிகுந்த ஆபத்தான டெங்கு